**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**
**செய்திக் குறிப்பு**

## அரசினர் மேனிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை

2017-18 ஆம் கல்வியாண்டில் புதுச்சேரி பகுதியில் உள்ள அரசினர் மேனிலைப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பிற்கான பள்ளி அளவிலான சேர்க்கை மற்றும் கலந்தாய்வுகள் சூன் மற்றும் சூலை மாதங்களில் முடிவுற்றன. அதன் தொடர்ச்சியாக அரசு பள்ளிகளில் மீதமுள்ள இடங்களை நிரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பல அரசினர் மேனிலைப் பள்ளிகளுக்கு பதினொன்றாம் வகுப்புச் சேர்க்கைக்காக விண்ணப்பித்து கலந்தாய்வின் போது இடம் கிடைக்கப் பெறாதவர்களும், அண்மையில் 10-ஆம் வகுப்பு துணைப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் இதுவரை எந்த ஒரு பள்ளியிலும் சேராத மாணவ மாணவியர்களுக்கும் இறுதி வாய்ப்பாக கலந்தாய்வில் பதினோராம் வகுப்பில் சேர்வதற்கான ஆணை வழங்கப்பட உள்ளது. எனவே பதினொன்றாம் வகுப்பில் இடம் பெறுவதற்காக மாணவ மாணவியர்கள் தங்களின் மதிப்பெண் பட்டியல்(Xerox), மாற்றுச்சான்றிதழ், குடியிருப்புச் சான்றிதழ் (Nativity/ Residence certificate) மற்றும் பெற்றோருடன் பின்வரும் அட்டவணைப்படி காராமணிக்குப்பம் **ஜீவானந்தம் அரசு மேனிலைப் பள்ளியில்** நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். புதுச்சேரி குடியிருப்பு பெறாத மாணவர்கள் 04.08.2017 அன்று மாலை 2.30 மணிக்கு கலந்தாய்வுக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுப்படுகிறார்கள்.

| வ. எண் | மதிப்பெண்கள் | நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1 | 499 முதல் 300 வரை | 03.08.2017 | காலை 9.30 மணி |
| 2 | 299 முதல் 250 வரை | 03.08.2017 | மாலை 2.30 மணி |
| 3 | 249 முதல் 175 வரை | 04.08.2017 | காலை 9.30 மணி |
| 4 | 499 முதல் 175 வரை (குடியிருப்பு இல்லாதவர்கள்) | 04.08.2017 | மாலை 2.30 மணி |

ல. குமார்
**பள்ளிக் கல்வி இயக்குநர்**

இந்தச் செய்திக் குறிப்பினை தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் வெளியிட அன்போடு வேண்டுகிறேன்.

ல. குமார்
**பள்ளிக் கல்வி இயக்குநர்**

இடம்: புதுச்சேரி
தேதி: 28.07.2017